**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்**

**முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, L.L.M.,**

**நீதித்துறை நடுவர், மேலூர்**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26–ஆம் நாள் வியாழக்கிழமை**

**முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.4/2025**

...

ஒத்தக்கடை காவல் நிலையம்
குற்ற எண்.356/2021
பிரிவுகள் **306 IPC & 3, 4 of**
**TN Prohibition of Charging Exorbitant**
**Interest Act** .... குற்றமுறையீட்டாளர்

**//எதிரிடை//**

1) கச்சிபாத்து,
த/பெ.சீனி மைதீன்,
2/242, மேலூர் மெயின் ரோடு,
ஒத்தக்கடை, மதுரை மாவட்டம்,
தற்போதைய முகவரி
காந்திநகர், ஒத்தக்கடை.

2) ஜவஹர் நிஷா (எ) நிஷா அம்மா,
க/பெ.முகமது மன்சூர்,
2/400, காந்திநகர், ஒத்தக்கடை,
மதுரை மாவட்டம்.

3) அமீர் அம்ஷா,
த/பெ.சீனி மைதீன்,
3/144, மேலூர் மெயின் ரோடு,
ஒத்தக்கடை, மதுரை மாவட்டம்,

...**எதிரிகள்**

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.26 04:27:14 +0530

இவ்வழக்கானது மேலூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 24.01.2025–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, PRC No.4/2025 என்ற எண் வழங்கப்பட்டு, அரசு சார்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை II அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பூமிநாதன் அவர்கள் ஆஜராகியும், 2–ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 3–ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.T.ஜெயந்தி அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கில் ஆவணங்களைப் பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

1) இவ்வழக்கின் வாதி மணிமேகலையும், அவரது கணவர் சுப்பிரமணியபிள்ளை என்பவரும் குடும்ப சூழ்நிலை காரணமாக கடந்த 2014–ம் ஆண்டு ஒத்தக்கடை காந்தி நகரைச் சேர்ந்த கட்சிபாத்து மகன் அமீர்அம்சா என்பவரிடம் ரூ.2,00,000/–ம் கடனாக பெற்று மாதம் ரூ.5000/–ம் வட்டி செலுத்தி வந்துள்ளனர். அதன் பிறகு 2020–ம் வருடம் கொரோனா காலம் என்பதால் ஏப்ரல் மாதம் முதல் வட்டி செலுத்தாமல் வாதியும், அவரது கணவரும் இருந்து வந்துள்ளனர். அதனால் அமீர்அம்சா அவரது அக்கா ஜவஹர்நிஷா (எ) நிஷா மற்றும் அவரது அம்மா கட்சிபாத்து ஆகியோர்கள் அடிக்கடி வாதி வீட்டிற்கு சென்று பணத்தைக் கேட்டு வாதியின் கணவரிடம் பணத்தை கொடுக்க முடியாவிட்டால் உன் மனைவியை யாரிடமாவது கூட்டிவிட்டு பணத்தை கொடு என இழிவாக பேசி வந்துள்ளனர். அதனால் மன வருத்ததில் வாதியும் அவரது கணவரும் இருந்த நிலையில் கடந்த 01.06.2021–ம் தேதி இரவு 11.00 மணிக்கு வாதியின் கணவர் அமீரின் அக்கா ஜவஹர்நிஷா அவரது அம்மா கட்சிபாத்து ஆகிய இருவரும் அமீரிடம் வாங்கிய பணத்தை கட்டவில்லை என்பதால் நம்மை இழிவாக பேசி கேவலப்படுத்துகிறார் என்றும், அதனால் செத்துவிடலாம் என்றும் வாதியிடம் வாதியின் கணவர் சொன்னதாகவும், அதன் பின்பு 02.06.2021–ம் தேதி சுமார் 2.00 மணிக்கு எழுந்து

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.26 04:27:18 +0530

பார்த்தபோது வாதியின் கணவர் அருகில் எலி மருந்து பாக்கெட் கிடந்ததாகவும், வாதி தனது கணவரை எழுப்பி பார்த்தபோது பேச்சு மூச்சு இல்லாமல் இறந்துபோய் கிடந்துள்ளார். அவரின் அருகூக அவர் கைப்பட எழுதிய பேப்பரில் மேற்படி எதிரிகள் இழிவாக பேசியதன் காரணமாகவே தான் உயிர்வாழ பிடிக்காமல் தற்கொலை செய்து கொள்வதாக கடிதம் எழுதி வைத்துள்ளார் என்பதும் வாதியின் கணவர் மேற்படி எதிரிகள் கொடுத்த அழுத்ததின் காரணமாகவே தற்கொலை செய்துள்ளார். எனவே 1 முதல் 3 எதிரிகள் வாதியின் கணவரை தற்கொலை செய்ய தூண்டிய குற்றத்திற்கு பிரிவுகள் 306 IPC & 3, 4 of TN Prohibition of Charging Exorbitant Interest Act-ன்படி தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளார்கள்.

2) இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான போது அவருக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS-ன் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட்டது.

3) வழக்கு விசாரணையின் போது அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உண்டா? என வினவியபோது, 1 முதல் 3 எதிரிகள் "உண்டு" என்று கூறினார்.

4) வழக்கு விசாரணையின் போது பிணையில் உள்ள மேற்படி 1 முதல் 3 எதிரிகள் வழக்கு விசாரணை முடியும் வரை அதே பிணையில் இருக்கவும், பிரிவு 323/362 BNSS-ன் கீழ் மதுரை, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவும் அலுவலகத்திற்கு உத்தரவிடப்படுகிறது.

5) இவ்வழக்கில் பிணையில் உள்ள 1 முதல் 3 எதிரிகள் வரும் 16.04.2026-ஆம் தேதி காலை 10.00 மணியளவில் மதுரை, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என பிரிவு 323/362 BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.26 04:27:23 +0530

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள், இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.26 04:27:27 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>**நகல்:**</u>

1) மதுரை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) அரசு குற்றத்துறை வழக்கறிஞர், மதுரை.